அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்


பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X




காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்


*Vol:7 Issue :26 April 2025* கோட்டை:7 வாயில்:26 ஏப்ரல் 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism ,
University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005,
Uttar Pradesh,India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil, Chennai-600100

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்


தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரான தெய்வச்சிலையாரின்
பிற உரை நுட்பங்கள்
முனைவர்.வி.சேகர்

தொல்காப்பியப் புறத்திணையியல் வெட்சித் திணையில் பாட வேறுபாடுகள்
கு.செந்தமிழ்செல்வி

எட்டுத்தொகை - 'குறுந்தொகை'யில் செலவழுங்கல்
ஆ.கவிதா

சங்க இலக்கிய அகநூல்களில் உடன்போக்கு
மா.மகேஸ்வரி

சங்ககால அலைகுடிகளானப் பாணர்-கூத்தர் ஒப்பீடு
ப. நந்தினி

களவுத்துறைத் தலைவன் கூற்றுகளில் தொல்காப்பியரும் திருவள்ளுவரும்
திருமதி.கோ.சரண்யா

புறநானூற்றில் வல்லாண்முல்லைத் துறை உணா ்த்தும் போர்
ப.சிவாஜி

பதினெண்கீழ்க்கணக்கு 'திரிகடுகத்தில் கல்விச் சிந்தனைகள்
இரா.தீபலெட்சுமி

பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் 'திரிகடுகம்' வலியுறுத்தும் புணை நெறி
இரா.ஹேமலதா

சிலம்பில் அரசியல்
மு.உமாமகேஸ்வரி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**திருநாவுக்கரசரின் இறைநெறிக் கொள்கைகள்**
**முனைவர் ச.வைத்தீஸ்வரன்**

**திருமூல நாயனாரின் இல்லற அறங்கள்**
**முனைவர் ஹ.விஜயலட்சுமி**

**பெரியபுராணம்: நாயன்மார்களின் அறச் சிந்தனைகள்**
**ப.பிரபு**

**திருமாலின் அவதாரங்களும் குறியீடுகளும்**
**சா.ஜனார்த்தனன்**

**சிற்றிலக்கியங்களில் வைகுந்த வழிபாட்டு முறைகள்**
**திருமதி நா.நித்யா**

**நடன குஞ்சிதபாதம் எழுதிய மதுரைக் கதம்பத்தில் காணலாகும் உத்திகள்**
**கி. ராஜ்குமார்**

**தர்காவும் விளிம்புநிலை மக்களும்**
**முனைவர் மௌ.அஸ்கர் அலி**

**இந்தியத் தத்துவத்தின்வழி இலக்கியத்தில் இருத்தலியல்**
**முனைவர் நா. ஜிதேந்திரன்**

**சங்கதி புதினத்தில் பெண் பாத்திரப்படைப்புகள் ஓர் ஆய்வு**
**ரா.சந்தியா**

**ஜெயமோகனின் வெண்முரசு நாவலில் 'மணவிழவுச் சடங்குகள்'**
**ரா.ஹேமா சிவகா**

**கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்**
**இரா.கலாவதி**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**
**நன்றி**

# அகத்தினுள்


**இலக்கியங்களில் தகவல் தொடர்பியல்**
ந.மஞ்சுளா

**மகாபரதச்சூடாமணியில் கைச் செயற்பாடுகள்**
பத்மினி. S

**EASY LEARNING TECHNIQUES**
PROF. Dr. Er. S. HARI PRASAD

**Exploring the Lesson planning process of Teachers Teaching Mathematics in Grade 9 In Batticaloa District Schools**
Kanapathipillai Gnanaretnam

**A Comparative Study Of Formal And Non-formal Education Systems**
Shiyani Thevaruban

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**
முனைவர் வி. ஜெயஸ்ரீ பிரியதர்ஷினி1, எல். பஷீரா பேகம்2

**நடுநிலைப்பள்ளி மாணவர்களின் விளையாட்டு அடிப்படையிலான தமிழ் கற்றலின் மனப்போக்கு குறித்து ஓர் ஆய்வு**

**The Architecture of Thirunallūr Kalyānasundharēswarar Attic (Māda) Temple in Thiruvarur District, Tamil Nadu**
P.PRAVEENKUMAR

**Educational and Intervention, Impact a case study on Nilgiris and Chennai Slums**
Dr. S.Udhaya Kumar.

**தொல்காப்பியம் புறத்திணையியல் மானுடவியல் விழுமியங்கள்**
முனைவர் செ. சாந்தி



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# பதினெண்கீழ்க்கணக்கு:'திரிகடுகத்'தில கல்விச் சிந்தனைகள்
# *Educational thoughts in 'Thirikadukam' of Pathinenkeezhkanakku*

**இரா.தீபலெட்சுமி,**
*(Ref.No.23455/Ph.D.K8/Tamil/January 2018)*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,
ஆய்வு நெறியாளர்: **முனைவர் க.வேலு,**
உதவிப் பேராசிரியர் — துறைத் தலைவர், தமிழ்த்துறை,
ஸ்ரீகாசிவாசி சுவாமிநாத சுவாமிகள் கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்.
(திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு நாட்டின் வளமான வளர்ச்சிக்குச் சிறந்த கல்வியும், முறையான அரசியல் அமைப்பும் முதன்மையானதாகும். மனிதனின் மனதில் மறைந்து கிடக்கும் அறியாமை இருளை அகற்றும் ஒளி விளக்காகக் கல்வி உள்ளது. தனிமனித முன்னேற்றத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகவும்; திகழ்கிறது. தற்காலத்திலும் கல்வியில் தன்னிறைவு அடைந்த நாடே வளர்ச்சி அடைந்த நாடாகக் கருதப்படுகிறது. கற்றவனையே நாடும், வீடும் போற்றுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வியின் சிறப்பினைப் பண்டைத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இலக்கண, இலக்கியங்களும் சிறப்பித்துப் பாடுகின்றன.

தமிழில் முதலில் கிடைக்கும் இலக்கண நூலாகிய தொல்காப்பியமும், சங்ககால நூல்களாகிய பதினெண்மேற்கணக்கு நூல்களும், சங்க மருவியக்கால நூல்களாகிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் கல்வியின் முதன்மையை வலியுறுத்துகின்றன. கல்வியினால் மனிதனின் வாழ்வியலில் ஏற்படும் மாற்றங்களையும், அதன் விளைவாக எழும் பெருமைகளையும், கற்றலின் இனிமையையும், கல்லாமையின் தீமைகளையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய திரிகடுகம் உணர்த்தும் கல்விச் சிந்தனைகள் இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

**திறவுச்சொற்கள் (Keywords): அவை அஞ்சா கல்வி, இளமையில் கல், கல்வி, கற்றவரின் நட்பு.**

***Abstract***

*The best education and formal political system for the prosperity of a country is the first. The ignorance that disappears in the mind of man is a lighting lamp that removes darkness. Essential for individual progress and the progress of the country; Is. The country, which is now self -sufficient in education, is considered to be a developed country. The country and the house admire the learner. The Tamils were well aware of the excellence of such special education. Grammar and literature also highlighted.*

*Tolkappiyam, the first grammatical book in Tamil, the eighteen books of the Sangam, and the eighteen books of the Sangam Maruvia texts emphasize the primary of education. This article explains the changes in the life of man by education, the pride that arises, the sweetness of the learning, and the evil of the kallamai, one of the eighteen texts in Thirikadukam.*

*Keywords: Education, youthful stone, education, the friendship of the learner.*

**முன்னுரை**

திரிகடுகம் என்னும் நூலினைப் பாடியவர் நல்லாதனார். ஆதனார் என்பது இயற்பெயர். “நல்” என்பது அன்மொழியாகும். காப்புச் செய்யுளில் திருமால் உலகை அளந்தது, குருந்த மரத்தை முறித்தது, வஞ்சகச் சக்கரத்தை உதைத்தது ஆகிய நிகழ்வுகளைக் கூறியிருப்பதால் இந்நூலாசிரியர் வைணவ சமயத்தவர் என்று அறியலாகிறது. இவரின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும்.

நூலின் பெயர்க்காரணத்தை முதல் பாடலிலேயே “திரிகடுகம் போலும் மருந்து” என்று குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். சுக்கு, மிளகு, திப்பிலி இம்மூன்றையும் கடுக்கும் பொருள் என்பர். இதனை சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றையும் குறிக்கும் போது இது “திரி” கடுகம் என்று சொல்லப் பெறும் (பிங்கல நிகண்டு, ப.352). காப்புச் செய்யுளுடன் 101 வெண்பாக்களை கொண்டுள்ள இந்நூல் திருக்குறள், நாலடியார் போன்ற நூல் கருத்துகளைப் பெரிதும் போற்றுகிறது. ஒவ்வொரு வெண்பாவிலும் மூன்று அறக்கருத்துகள் சொல்லப்படுகின்றன.

**திரிகடுகத்தில் கல்விக் குறித்தப் பாடல்கள்**

திரிகடுகத்தில் உள்ள 100 செய்யுட்களில் 30 செய்யுட்களில் கல்வி குறித்த சிந்தனைகள் இடம்பெறுகின்றன. இவற்றை 1, 3, 7, 8, 9, 10, 17, 20, 21, 25, 26, 28, 31, 32, 35, 36, 46, 52, 53, 56, 65, 74, 75, 84, 86, 87, 90, 92, 93 ஆகிய பாடல் எண்களின்வழி அறியலாம். பெரும்பாலான பாடல்களில் அறிவின் மேன்மையும் அறியாமையின் இழிவையும் குறிப்பிடுவதன் மூலம் நல்லாதனார் கல்விக்குக் கொடுத்த சிறப்பினை உணரமுடிகின்றது.

**கற்றவரின் நட்பு**

அறியாமை அருளை அகற்றும் கல்வியைக் கற்ற ஒருவன், ஆய்ந்தக் கற்று அறிவில் மேம்பட்ட சான்றோர்களுடன் நட்புப் பாராட்டுதல் வேண்டும். நல்லாதனார் திரிகடுகத்தின் முதல் பாடலிலே சொற்களிடத்தில் உள்ள குற்றங்களை அகற்றும் கேள்வியுடையவரோடு கொண்ட நட்பானது, சுக்கு, மிளகு, திப்பிலி போன்ற மருந்துப் பாடல்களைப் போல நலம் பயக்கும் என்று,

*அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய*
*தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியுஞ் - சொல்லின்*
*அரிலகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றுந்*
*திரிகடுகம் போலு மருந்து.* (திரி.1)

என்னும் பாடல்வழி விளக்குகிறார். அறியாமையைப் போக்கும் கல்வி இல்லாமையால் கற்றவரோடு உறவுக் கொள்ளாமல், கல்லாதவர்களோடு உறவுக் கொள்வர் என்று,

*கல்லார்க் கினனா யொழுகலுங் காழ்கொண்ட*
*இல்லாளைக் கோலாற் புடைத்தலும் - இல்லஞ்*
*சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்*
*அறியா மையான்வருங் கேடு.* (திரி.3)

என வரும் பாடல் மொழிகின்றது. கற்பதற்கு வழியில்லாத சூழல் ஏற்படினும், கற்றலில் நிறைவுப் பெறாதச் சூழல் நிகழுமாயின் கற்றாரோடு உறவுப் பாராட்டினால் கற்றலின் பயனையும், அறிவையும் அடைய முடியும் என்று,

*கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்*
*நல்லறிவு நாளுந் தலைப்படுவர்.* (நாலடி.139)

என வரும் பாடலில் வெளிப்படுத்தும் நாலடியாரின் கருத்தானது திரிகடுகத்தின் கருத்தோடு ஒப்புநோக்கத்தக்கதாக உள்ளது. கற்றவரோடு மட்டுமே கற்றவர்கள் நட்புப் பாராட்ட வேண்டும். கல்வியறிவு சிறிதும் இல்லாதவரோடு நட்புப் பாராட்டுவது மூடரின் செய்கை என்பதை,

*கொல்வது தானஞ்சான் வேண்டலுங் கல்விச்*

*ககன்ற வினம்புகு வானு மிருந்து*
*விழுநிதி குன்றுவிப் பானுயிம் மூவர்*
*முழுமக்க ளாகற்பா லார்.* (திரி.87)

என்ற பாடலில் குறிப்பிடுகிறது.

**அவை அஞ்சா கல்வி**

சங்கம் வைத்து மொழியை வளர்த்தவர்கள் தமிழர்கள். கற்றச் சான்றோர்கள் அனைவரும் ஒன்றுக்கூடி மொழியை ஆராய்ந்து, செம்மையான இலக்கியங்களை உருவாக்கியதை சங்க இலக்கியங்களே சான்று பகர்கின்றன.

*உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்*
*அனைத்தே புலவர் தொழில்* (குறள்.394)

என வரும் குறளில் வள்ளுவரும், கற்றோர் அனைவரும் அவையில் ஒன்று கூடுதல் கற்றவரின் தொழிலாகும் என்பார். திரிகடுகமும் பலவகை நூலோடும் கூடியிருக்கும் நல்அவையில், மேம்பட்ட கல்வியின் புகழை சொல்லத்தான் வேண்டுமோ என்னும் பொருளில்,

*தொல்லவையுட் டோன்றுங் குடிமையுந் தொக்கிருந்த*
*நல்லவையுண் மேம்பட்ட கல்வியும்* (திரி.8:1-2)

என்ற பாடலில் குறிப்பிடுகின்றது. இவ்வாறு கற்றலிலும், அறிவிலும் சிறந்த சான்றோர்கள் கூடியிருக்கும் அவையில், தான் கற்ற நூலின் உணர்வினை எடுத்துரைக்க அஞ்சுபவர்களை, ஊமையன் கண்ட கனவினைப் போன்றது என்று,

*. . . . . . . . . . . . பல்லவையுள்*
*அஞ்சுவான் கற்ற வருநூலு மிம்மூன்றுந்*
*துஞ்சுமன் கண்ட கனா.* (திரி.7:2-4)

என்னும் பாடலில் குறிப்பிடுகின்றது. அவை அஞ்சா கல்வியே பயனுள்ளது என்கிறது இப்பாடல். மேலும் மாறுபட்ட பொருளை அறுக்கும் மூத்தோரும், கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோரும் இல்லாத அவையால் எந்த பயனும் விளைவதில்லை என்று,

*கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கும்*
*மூத்தோரை யில்லா வவைக்களனும்* (திரி.10:1-2)

என வரும் பாடலில் எடுத்துரைக்கிறது. கல்வி வளர்ச்சியால், தொழில்நுட்பத்தின் உச்சத்தைத் தொட்டு நிற்கும் தற்காலத்தில் சான்றோர் முன்னர் அச்சமில்லாமல் உரை நிகழ்த்துவதும், நேர்முகத் தேர்வில் அச்சமில்லாமல் பதிலுரைப்பதும் அடிப்படைத் தகுதியாக உள்ளது. இதற்குக் கல்விக் கூடங்குளும், தனியார் நிறுவனங்களும் பயிற்சிக்கூட அளிக்கின்றது. இக்கருத்தில் இயைந்து அன்றே திரிகடுகம் அவை அஞ்சா கல்வியின் பெருமையைப் போற்றுகின்றது. அவையம் ஆன்றோர்களால் ஆளப்பட வேண்டும் என்கிறது.

**ஆசிரியர் என்போர்**

குற்றமில்லாதவரும், குற்றங்களை களைபவருமாகிய ஆசிரியர் என்பவர், மாணாக்கர்களுக்கு முன்மாதிரியாக விளங்க வேண்டும். பெற்றோர்களுக்கு அடுத்தப்படியாக மாணாக்கர்களின் கனவு நாயகனாக விளங்குபவர் ஆசிரியரே. மாணாக்கர்களை நல்வழிப்படுத்தி, அவர்களின் வளர்ச்சியைக் கண்டு பெருமைக் கொள்பவருமாகிய ஆசிரியர்கள் உயர்ந்த ஒழுக்கத்தை உடையவராக ஈருத்தல் வேண்டும் என்கிறது திரிகடுகம்.

*சீல மினிதுடைய வாசானு மிம்மூவர்*
*ஞால மெனப்படு வார்.* (திரி.26:3-4)

உயிர்களுக்கு நன்மைத் தரக்கூடிய ஒழுக்கத்தையுடைய ஆசிரியர் “ஞாலம்” என்று அழைக்கப்படுவர் என்கிறது இப்பாடல். “ஞாலம்” என்பது உலகத்தையும், உயர்ந்தோரையும் குறித்து நிற்கிறது.

**கல்வியின் பயன்**

கற்றலின் பயன், அதன்படி நிற்றலில் மட்டுமல்ல, அதனை வெளிப்படுத்தலிலும் உள்ளது என்கிறது திரிகடுகம். நூல்களில் உள்ள சொற்களை ஆராய்ந்து நுட்பமாகப் பொருள் கொள்ளுதலும், பயனற்ற சொற்களை பிறர் விரும்பினாலும் சொல்லாமல் ஒழிதலும், நல்ல நூற்

கருத்துகளை, அவற்றை விரும்பிப் போற்றுவார்க்குக் கற்பிப்பதும் கல்வியின் பயனாகும். இக்கருத்தினை,

*நுண்மொழி நோக்கிப் பொருள்கோட னுற்கேலா*
*வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை — நன்மொழியைச்*
*சிற்றின் மல்லார்கட் சொல்லுத லிம்மூன்றுங்*
*கற்றறிந்தார் பூண்ட கடன்.* (திரி.32)

என்னும் பாடல்வழி அறியலாம்.

**கற்றவர் பெறும் பயன்**

கற்றலின் பயனை வெளிப்படுத்தும் திரிகடுகம் நுணுங்கி ஆராய்ந்த கற்றவர்கள் பெறும் பயனையும் வெளிப்படுத்துகிறது. கடலில் எழும் அலைபோல, தன் மனத்தை அலைய விடாது அறிவினையும், நுட்பமான சிந்தனையின் மூலம் நூல்களின் முடிவை ஐயம் திரிபுறக் கண்டு, குற்றத்தன்மை தன்னிடத்தில் உண்டாகாதபடி மனக்கலக்கம் இல்லாமல் வாழும் கற்றவர்கள் முக்தி உலகத்தில் வாழும் பேறு உடையவர் என்று,

*முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்*
*நுண்ணுற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்*
*மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்*
*மெய்ந்நீர்மை மேனிற் பவர்.* (திரி.35)

என்ற பாடலில் திரிகடுகம் உணர்த்துகின்றது. முக்தி உலகத்தை அடையக்கூடிய கற்றவர்களை கைவிட்டவர்கள் நல்ல உலகங்களை அடைய மாட்டார்கள் என்று,

*கற்றாரைக் கைவிட்டு வாழ்தலுங் காமுற்ற*
. . . . . . . . . . . . . . . . .
*நல்லுலகஞ் சேரா தவர்.* (திரி.99)

என்ற பாடலில் கற்றோரைப் போற்றுகின்றது.

**மறுமை அழகு**

அழகு என்பது உடுத்தும் உடையில் இல்லை; அணியும் ஆபரணத்தில் இல்லை; சேர்த்திருக்கும் செல்வத்தில் இல்லை; எது உண்மையான அழகு என்பதை,

*நல்லமயாம் என்று நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு.* (நாலடி.31:3-4)

என வரும் நாலடியார் பாடல் குறிப்பிடுகறிது. ஒரு பிறவியில் கற்றக் கல்வியானது மறுமையிலும் தொடர்ந்து வரும் என்பது ஆன்றோர் கருத்தாகும். திரிகடுகம் மறுமையே அழகாக மாற வேண்டும் என்றால், இப்பிறவியில் கல்வியைக் கற்றுக் கொள் என்று,

. . . . . . . . . . . . . *நண்ணும்*
*மறுமைக் கணிகலங் கல்வியிம் மூன்றுங்*
*குறியுடையார் கண்ணே யுள.* (திரி.52:2-4)

என வரும் பாடலில் அறிவுறுத்துவதை உணரமுடிகிறது. காதறுத்த ஊசியும் கடைக்கண் வாராத போது, கற்றக் கல்வியானது மறுபிறவியையும் அழகாக்கும் என்னும் கருத்தானது சிந்திக்கத்தக்கதாக உள்ளது.

முக்தி அடைதலையும், மறுமையின் அழகையும் வெளிப்படுத்தும் நல்லாதனார் கல்லாதவரை மக்கட் பிறப்பில் பிறந்தும் பிறவாதவர் என்று,

*விழுத்திணைத் தோன்றா தவனு மெழுத்தினை*
*ஒன்று முணராத வேழையும் - என்றும்*
*இறந்துரை காமுறு வானுமிம் மூவர்*
*பிறந்தும் பிறவா தவர்.* (திரி.92)

என வரும் பாடலில் இகழ்கிறார். எழுத்தினை உணராதவனை “ஏழை” என்று குறிப்பிடுகிறது இப்பாடல்.

**இளமையில் கல்**

பொருட்செல்வத்தை யாரும் களவாடிச் சென்று விடலாம். கால மாற்றத்தால் கரைந்தும் போகலாம். ஆனால் "கல்வி" என்னும் செல்வத்தை யாரும் களவாட முடியாது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளர்ந்துக் கொண்டே செல்லும். இத்தகையச் செல்வத்தை இளமைப் பருவத்தே கற்றல் வேண்டும்.

கற்றலில் மாற்றத்தை ஏற்படுத்தாதக் கல்வியினால் எந்தப் பயனும் விளைவதில்லை என்பது காலம் காலமாக அறிஞர் பெருமக்களால் சொல்லப்பட்டு வரும் கருத்தாகும். தெளிந்த நீரோடைப் போல உள்ள உணர்வு தோன்றும் பருவம் இளமைப்பருவம். அப்பருவத்தில் கல்விக் கற்றால் கற்றலில் மாற்றத்தைக் கொண்டு வரலாம். தவறு நிகழும் வாலிப வயதில் கல்வியின் பயனால் நேர்வழியில் செல்ல முடியும்.

ஒருவனுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும், உயர்வையும், முக்தியையும் கொடுக்கும் கல்வியை இளமையில் கற்றல் வேண்டும் என்று நல்லாதனார் அறிவுறுத்துகிறார். இளமைப் பருவத்தில் கல்வியறிவு உண்டானால், காலப்போக்கில் அதன் பொருளை முழுமையாக உணர்ந்து தாயையும் தந்தையையும் போற்ற முடியும். கற்றலினால் உண்டாகிய ஒழுக்கத்தினால் பெரியோரின் வழியை அடைய முடியும் என்கிறார்.

*முந்தை யெழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு*
*தந்தையுந் தாயும் வழிபட்டு — வந்த*
*ஒழுக்கம் பெருநெறி சேர்தலிம் மூன்றும்*
*விழுப்ப நெறிதூரா வாறு.* (திரி.55)

ஒருவன் இளமையில் கல்வி கற்பதன் மூலமே அவனும், அவனைச் சார்ந்த குடும்பமும் சமுதாயமும் பயனடையும் என்பதை இப்பாடல் மூலம் அறியமுடிகிறது. ஒரு குழந்தையின் ஆளுமைத் திறனைத் தீர்மானிக்கும் பருவம் குழந்தைப் பருவமாகும் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இதனால் இக்காலத்தில் கல்வியினைப் பெறுவது அவசியமாகவும் அடித்தளமாகவும் அமைகிறது.

**தற்காலத்திற்கும் பொருந்தும் கல்விச் சிந்தனைகள்**

தொல்காப்பியர் காலம் முதல் தற்காலம் வரை உள்ள இலக்கியங்கள் அனைத்தும் கல்வியின் முதன்மையையும் மேன்மையையும் வலியுறுத்துகின்றன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள அற நூல்களும் வாழ்வியல் அறத்தோடு கல்வியறத்தையும் இணைத்தே பாடுகின்றன. துன்பக் கடலில் மூழ்கியவனுக்கு துடுப்பாக இருந்து கரை சேர்ப்பது கல்வியாகும். வாழ்வின் திசையறியாது திகைப்பவனுக்கு கலங்கரை விளக்காகக் கல்வி வழிக்காட்டுகிறது. இத்தகையச் சிறப்பு வாய்ந்தக் கல்வியைக் கற்கும்பொழுது பல நூல்களிலும் உள்ள நல்ல நூற் பொருள்களைத் தேடி கற்றுணர வேண்டும் என்று,

*பல்லவையு ணல்லவை கற்றலும் பாத்துண்டாங்*
. . . . . . . . . . . . . . . . .
*கேள்வியு ளெல்லாந் தலை.* (திரி.31)

என வரும் பாடலில் திரிகடுகம் மொழிகின்றது. கற்கத் தக்கவற்றைக் கற்றல் கல்விகளுக்கெல்லாம் சிறந்த கல்வியாகும் என்ற கருத்தானது தற்காலத்தில் மிகப் பொருத்தமாகவே உள்ளது. புற்றீசல் போல பல்கிப் பெருகியுள்ள தற்கால நூல்களின் தரத்தை ஆராய்ந்து, அவற்றைக் கற்று அறிவினை வளர்த்துக்கொள்ள மாணாக்கர்கள் முன்வர வேண்டும்.

இவ்வாறு பல நூல்களை நாடி, அவற்றை ஆராய்ந்து, நல்லவைகளை ஆராய்ந்துக் கற்றல், நற்செயல்களையுடைய நல்லவர்களின் கொள்கையாகும் என்று,

*பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்*
*நலமாட்சி நல்லவர் கோள்.* (திரி.21:3-4)

என்னும் பாடல்வழி திரிகடுகம் தெளிவுப்படுத்துகிறது. தீய நூல்களை ஒதுக்கி, நற்கருத்துகளைப் போதிக்கும் நூல்களைக் கற்று, அதன்படி தம் வாழ்வியலை அமைத்துக் கொண்டால் அறிவிலும் ஒழுக்கத்திலும் மேம்பட்டவர்களாகத் திகழ முடியும் என்பதை திரிகடுகம் வழி அறியமுடிகிறது.

பழந்தமிழரின் அறியாமையைப் போக்கும் மருந்தாக இருந்த கல்வியின் தேவை, நாகரிகத்தின் உச்சத்தில் திகழும் தற்காலத்திலும் அடிப்படைத் தேவையாக இருப்பதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

இம்மையில் இன்பத்தையும், மறுமையில் அழகையும் கொடுக்கும் கல்வியைக் கற்றவர்கள் உயர்வாகக் கருதப்பட்டதை திரிகடுகம்வழி அறியமுடிகிறது. சாதி வேறுபாடுகளும், பொருளாதார வேறுபாடுகள் நிறைந்த தற்காலத்திற்குக் கல்வியின் தேவை மிகையாகவே உள்ளது. பொருளாதார சீர்கேட்டாலும், சாதிய ஏற்றத்தாழ்வுகளாலும் புரையோடிக் கிடக்கும் தற்கால சமுதாயத்தை மாற்றிடும் அருமருந்தாகக் கல்வித் திகழ வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாக உள்ளது. கேடில்லாத விழுச்செல்வமாக உள்ளக் கல்வியை, பீடுடன் கற்றால், ஈடில்லாத சமுதாயத்தை உருவாக்க முடியும். பாவேந்தரின் வரிகளுக்கேற்ப புதியதோர் உலகையும் அமைக்க முடியும் என்பதை திரிகடுகம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது.

**துணைநூற் பட்டியல்**


இராகவையங்கார், மு., *தொல்காப்பிய பொருளதிகார ஆராய்ச்சி.* மதுரை: மதுரை தமிழ்ச் சங்கம், 1922.

இலம்போதரன், சு. (ப.ஆ.), *பழைய தமிழ் அகராதி பிங்கல முனிவர் செய்த பிங்கலந்தை என்னும் பிங்கல நிகண்டு,* வீராட்சிமங்கலம் தமிழ்ப் புலவர் தி.சிவன்பிள்ளை (உ.ஆ.), சென்னை: வசந்தா பதிப்பகம், 2000.

கௌமாரீஸ்வரி, எஸ். (ப.ஆ.), *பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்.* சென்னை: சாரதா பதிப்பகம், 2009.

*கௌரா தமிழ் அகராதி.* சென்னை: சாரதா பதிப்பகம், 2003.

பாலசுப்பிரமணியன், கு.வெ. (உ.ஆ.), *புறநானூறு.* சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., மூன்றாம் பதிப்பு, 2007.

வரதராசனார், மு., *திருக்குறள் தெளிவுரை.* சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 174வது பதிப்பு, 2002.


## References


Ragavaiyangai, M., *Tholkappiya Porulathikara Aaraichi.* Madurai: Madurai Tamil Sangam, 1922.

Ilambotharan, S. (Ed.), *Palaya Tamil Agarathi Pingala Munivar Seitha Pingalanthai ennum Pingala Nigandu,* Veerachimangalam Tamil Pulavar T.Sivanpillai (Ed.), Chennai: Vasantha Pathippagam, 2000.

Gowmariswari, S. (Ed.), *Pathinenkeezhkanakku Noolkal.* Chennai: Saratha Pathippagam, 2009.

*Gowra Tamil Agarathi.* Chennai: Saratha Pathippagam, 2003.

Balasubramanian, K.V. (Ed.), *Purananooru.* Chennai: New Century Book House (P) Ltd., 3rd Edition, 2007.

Varathanar, M., *Thirukkural Thelivurai.* Chennai: Thenninthiya Saiva Siddhantha Noorpathippu Kazhagam, 174th Edition, 2002.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com